செ.வெ.எண் :660 நாள்: 08.10.2021

# தஞ்சாவூர் மாவட்டத்தில் 2020-2021 பருவத்தில் 1054520.660 மெ.டன் நெல் அளவு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது-மாண்புமிகு உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள் தகவல்.

மாண்புமிகு உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்களுடன் மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா திரு.கோவி.செழியன் அவர்கள், மாண்புமிகு தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.எஸ்.எஸ்.பழனி மாணிக்கம், மாண்புமிகு மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.செ.இராமலிங்கம் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப. அவர்கள் ஆகியோர் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் மூலம் விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்படும் நெல் பிடித்தம் குறித்து கலந்தாலோசனை மேற்கொண்டு பின்னர் தஞ்சாவூர் மாவட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் ஒரத்தநாடு, தஞ்சாவூர் மற்றும் பாபநாசம் ஆகிய ஊராட்சி ஒன்றிய ஒன்றியங்களில் அமைந்துள்ள நெல் கொள்முதல் நிலையங்களின் செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள் இன்று (08.10.2021) பார்வையிட்டு ஆய்வு செய்து பேசியதாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் தமிழக அரசு விவசாயிகளிடமிருந்து நெல் மூட்டைகளை உடனடியாக கொள்முதல் செய்து தனியார் அரிசி ஆலைகளுக்கும், தமிழக அரசின் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக இயங்கும் 21 ஆலைகளுக்கும் அனுப்ப வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தஞ்சாவூர் மாவட்டத்தில் ஆனந்த் உம்மி நீக்கும் ஆலை, அம்மன்பேட்டை நவீன அரிசி ஆலை, திருமண்டங்குடி நெல் கொள்முதல் நிலையம், மடிகை நெல் கொள்முதல் நிலையம், தென்னமநாடு நெல் கொள்முதல் நிலையம், சாலியமங்கலம் நெல் கொள்முதல் நிலையம் மற்றும் அம்மாபேட்டை நெல் கொள்முதல் நிலையம் ஆகிய நெல் கொள்முதல் நிலையங்களின் செயல்பாடுகள் குறித்து இன்று ஆய்வு செய்யப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து விவசாயிகளிடமிருந்து நெல்லை உடனடியாக கொள்முதல் செய்ய வேண்டும் என்றும் கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளுக்கு உரிய பணத்தை உடனடியாக அளிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளார்கள். அதனடிப்படையில் 5 தேதி வரை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ள அனைத்து நெல் மூட்டைகளுக்கும் பணம் வழங்கப்பட்டுள்ளது. 12 ஆண்டுகளுக்கு பிறகு சன்ன ரக நெல்லுக்கு குவின்டால்க்கு ஏற்கனவே ரூபாய் 1960 வழங்கப்பட்டிருந்தது அதனை 2060 ரூபாயாகவும், இதேபோன்று புது ரக நெல்லுக்கு 1940 ரூபாயாக இருந்ததை 2015 ரூபாயாகவும் உயர்த்தி விவசாயிகளுக்கு வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மேலும் தஞ்சாவூர் மாவட்டத்தில் 249 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது ஒவ்வொரு கொள்முதல் நிலையங்களில் குறைந்தபட்சம் 500 முதல் 1000 முட்டைகள் வரை கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் 2020-2021 பருவத்தில் 1054520.660 மெ.டன் நெல் அளவு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது விவசாயிகள் எங்கெல்லாம் நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்க வேண்டும் என்று கூறுகிறார்களோ அந்த இடத்தில் உடனடியாக கொள்முதல் நிலையங்களை திறக்க மாவட்ட நிர்வாகத்திற்க்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேலும் தனியார் பங்களிப்புடன் நவீன அரிசி ஆலை உருவாக்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும் தமிழக அரசு நெல் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்கப்பட்டதோடு உரிய நேரத்தில் கொள்முதல் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு பணம் உடனடியாக வழங்கப்படுவதால் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு நெல் உற்பத்தி கூடுதலாகும் என்றும் மாண்புமிகு உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள் பேசினார்.

இந்த ஆய்வின் போது மாண்புமிகு தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.எஸ்.எஸ்.பழனி மாணிக்கம், திரு.துரை.சந்திரசேகரன் (திருவையாறு), சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.க.அன்பழகன் (கும்பகோணம்), திரு.டி.கே.ஜி.நீலமேகம் (தஞ்சாவூர்), திரு.அண்ணாதுரை (பட்டுக்கோட்டை), பெற்றோர் ஆசிரியர் கழக மாநில துணைத்தலைவர் திருஎஸ்.கல்யாணசுந்தரம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஏனாதிபாலு இணை நிர்வாக இயக்குனர் திருமதி சங்கீதா முதுநிலை மண்டல மேலாளர் திருமதி உமா மகேஸ்வரி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்திவெளியீடு : செய்தி -மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.**